| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
|---|---|---|
| | மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)<br>Third Term Exam 2022 (2023) | 12 \| I \| II |
| | சைவநெறி தரம் 11<br>Saivanery Grade 11<br><br>Class.................................................... | நேரம் 2 மணித்தியாலம்<br>Time 2 Hours<br><br>Index No...................................... |

## பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை விளக்கும் வடிவம்,
   1. சோமஸ்கந்தர் 2. பிச்சாடனர்
   3. நடராஜர் 4. அர்த்தநாரீஸ்வரர்

2) தனிமனிதருக்கன்றி சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச் செயல்கள்
   1. அன்பு 2. ஈகை 3. வாய்மை 4. ஒப்புரவு

3) பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்படும் கரணங்களின் எண்ணிக்கை யாது?
   1. இருபத்தேழு 2. முப்பது 3. அறுபது 4. ஐந்து

4) ஆவணி பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் விரதம்
   1. வரலட்சுமி விரதம் 2. கௌரி விரதம்
   3. அம்மன் விரதம் 4. ஆவணி சதுர்த்தி விரதம்

5) திருவண்ணாமலையில் மக்கள் கிரிவலம் செய்யும் விசேட நாள் எது?
   1. சிவராத்திரி 2. கார்த்திகை விளக்கீடு
   3. கந்தசஷ்டி 4. கார்த்திகை பிரதோசம்

6) ஒளியைக் கொடுப்பதனால் விபூதிக்குக் கிடைக்கும் மறு பெயர் யாது?
   1. பசிதம் 2. பஸ்மம் 3. இரட்சை 4. ஷாரம்

7) இறந்த ஒருவருக்கு குறித்த திதியில் ஆண்டுதோறும் செய்யப்படும் திவசம்
   1. அஸ்தி சஞ்சயனம் 2. அந்தியேட்டி
   3. சிரார்த்தம் 4. வீட்டுக்கிருத்தயம்

8) சகலகலாவல்லி மாலையை பாடியவர் யார்?
   1. குமரகுருபர சுவாமி 2. வரதபண்டிதர்
   3. அபிராமிப் பட்டர் 4. தாயுமானவர்

9) ஸ்கந்த புராணத்தின் சங்கர சங்கிதையில் உள்ள சிவரகசிய கண்டம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
   1. ஐந்து 2. ஏழு 3. மூன்று 4. ஆறு

10) சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகள் எத்தனை வகைப்படும்?
   1. ஐந்து 2. ஏழு 3. மூன்று 4. ஆறு



kalvi.lk

11) நித்திய நைமித்தியங்கள் நிகழ்ந்து வரும் வேளை ஆலயத்தின் உறுப்புக்களிலோ விக்கிரகங்களிலோ சேதம் ஏற்படும் இடத்து, பாலஸ்தானம் செய்து, ஆலயத்தை புனரமைத்து இறைவனை பிரதிஷ்டை செய்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
1. அநாவர்த்தனர் 2. ஆவர்த்தனம்
3. புனராவர்த்தனம் 4. அத்தரியம்

12) சுந்தரருக்கு வலக்கண் பார்வை பெற்ற தலம்
1. திருக்குற்றாலம் 2. திருப்புன்கூர்
3. திருவாரூர் 4. திருவெண்பாக்கம்

13) தென்னவன் பிரமராயர் என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்ற சமய குரவர்
1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

14) மறைஞானசம்மந்தர் முத்தியடைந்த தினம்
1. ஆவணி உத்தரம் 2. ஆனி மூலம்
3. சித்திரை அத்தம் 4. ஆவணி மகம்

15) மார்கழிமாத கொடியேற்றத் திருவிழா ஒன்றில் ஏறாது நின்ற கொடியை கொடிக்கவி எனும் பிரபந்தம் பாடி ஏறச்செய்தவர்
1. உமாபதிசிவாச்சாரியார் 2. அருணந்தி சிவாச்சாரியார்
3. மறைஞானசம்பந்தர் 4. மெய்கண்டார்

16) அருணகிரிநாதர் வாழ்ந்த காலப்பகுதி எது?
1. கி.பி 5ம் நூற்றாண்டு 2. கி.பி 15ம் நூற்றாண்டு
3. கி.மு 5ம் நூற்றாண்டு 4. கி.மு 15ம் நூற்றாண்டு

17) ஆறுமுக நாவலருடைய குருபூசை தினம் எப்போது?
1. வைகாசி மூலம் 2. சித்திரை சதயம்
3. ஆவணி உத்தரம் 4. கார்த்திகை மகம்

18) சகச மலம் எனப்படுவது
1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. எதுவுமில்லை

19) ஆன்மாக்கள் தாம் செய்த வினையின் பயனாக அனுபவிக்கின்ற வினை
1. சஞ்சிதம் 2. பிரார்த்தம் 3. ஆகாமியம் 4. கன்மம்

20) ஒருவரை சிவபுத்திரன் எனும் தகுதிக்கு இட்டுச் செல்லும் தீட்சை
1. சைவ தீட்சை 2. சமயதீட்சை
3. விசேட தீட்சை 4. நிர்வாண தீட்சை

21) எவ் வழிபாட்டில் சாதகன் தன்னை அடிமையாகவும் சிவனை ஆண்டானாகவும் பாவனை செய்யப்படுகிறது
1. சரியை வழிபாடு 2. கிரியை வழிபாடு
3. யோக வழிபாடு 4. ஞான வழிபாடு

22) சாதகன் தன்னை மகனாகவும் இறைவனைத் தந்தையாகவும் பாவித்து அன்பு செலுத்தும் மார்க்கம்
1. தாச மார்க்கம் 2. சற்புத்திர மார்க்கம்
3. சக மார்க்கம் 4. சன் மார்க்கம்

23) சரியைத் தொண்டு செய்வோருக்கு சிவனுடைய உலகத்தில் கிடைக்கும் முத்தி
1. சாமீப முத்தி 2. சாலோக முத்தி
3. சீவன் முத்தி 4. சாரூப முத்தி



kalvi.lk

24) மாமாங்க பிள்ளையார் ஆலயத்தின் தல விருட்சம் எது?
1. குருந்தமரம் 2. வன்னி மரம்
3. வில்வ மரம் 4. மாமரம்

25) மண்டூர் கந்தசவாமி ஆலயத்தின் பூசை செய்பவரை எப் பெயர் கொண்டழைப்பர்?
1. கப்புறாளை 2. பூசகர்
3. குருக்கள் 4. கப்புகனார்

26) மண்டூர் கந்தசவாமி ஆலயத்தில் படிக்கப்படும் புராணம்
1. திருத்தொண்டர் புராணம் 2. கந்தபுராணம்
3. திருச்செந்தூர் புராணம் 4. சேக்கிழார் புராணம்

27) நிலையான கொடித்தம்பம் இன்றி கொக்கட்டி மரத்தினாலான நேரிய தடியொன்றில் கொடிமரம் தயார் செய்யப்படும் ஆலயம்
1. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம்
2. இணுவில் கந்தசுவாமி கோவில்
3. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
4. மண்டூர் கந்தசவாமி ஆலயம்

28) பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலின் தோற்றம் பற்றி கூறும் நூல்,
1. தட்சிணைகைலாயபுராணம் 2. பௌத்த வரலாறு
3. இலங்கைச் சரித்திரம் 4. மகாவம்சம்

29) உருத்திராக்க மணிகள் ஆக்ககூடியது எத்தனை முகங்களைக் கொண்டது ஆகும்?
1. 27 2. 15 3. 16 4. 30

30) "நீறில்லா நெற்றி பாழ்" எனக் கூறியவர் யார்?
1. நாவலர் 2. ஔவையார்
3. திருமூலர் 4. விபுலானந்தர்

31) கந்தரலங்காரத்தை பாடியவர் யார்?
1. குமரகுருபரர் 2. அருணகிரிநாதர்
3. கச்சியப்ப சிவாச்சாரியார் 4. வரத பண்டிதர்

32) என்றும் பதினாறு வயது என்ற அருள் கிடைக்கப்பெற்றவர் ,
1. வரத பண்டிதர் 2. மிருகண்டு முனிவர்
3. மார்க்கண்டேயர் 4. பிரகலாதன்

33) பின்வருவோரில் அகச்சந்தான குரவர்கள் யார்?
1. திருநந்தி தேவர், மறைஞான சம்பந்தர்
2. சனற்குமார், உமாபதிசிவாசிசாரியார்
3. மெய்கண்டதேவர், பரஞ்சோதி முனிவர்
4. சத்தியஞானதரிசினி, சனற்குமாரர்

34) குங்கிலியக் கலயர் நின்ற நெறி யாது?
1. சரியை நெறி 2. கிரியை நெறி
3. யோக நெறி 4. ஞான நெறி

35) ஈழத்து நூற்பதிப்பிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?
1. விவேகானந்தர் 2. விபுலானந்தர்
3. நாவலர் 4. சேர். பொன். இராமநாதன்



kalvi.lk

**36 – 40 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**

| | | |
|---|---|---|
| A. தடத்தநிலை | B. சிவஞானசித்தியார் | C. விஷ்ணு |
| D. சக்தி | E. சிவம் | F. மெய்கண்டதேவர் |
| G. சொரூபநிலை | H. அருணந்திசிவாச்சாரியார் | I. பிரமா |
| J. நாதம் | K. உருத்திரன் | L . சிவஞானபேதம் |

36) கடவுளின் இரு நிலைகளுடனும் தொடர்புடைய தொகுதி
1. A, B 2. A, G 3. C, J 4. E, J

37) அருவுருவத் திருமேனியை உள்ளடக்கிய தொகுதி
1. E, I, J 2. C, D, K 3. I, J, K 4. D, E, J

38) சித்தாந்த நூல்களை அருளியோர் அடங்கும் தொகுதி
1. B, I 2. F, H 3. D, M 4. I, J

39) சைவ சித்தாந்தத்தின் முதல்நூல், வழிநூல் என்பவை அடங்கும் தொகுதி
1. L, B 2. A, B 3. K, L 4. H, L

40) முத்தொழில்களுடன் தொடர்புடைய மூர்த்தங்கள்
1. L, I, K 2. C, D, E 3. I, C, K 4. E, J, K

( 20X2=40 புள்ளிகள்)

**பகுதி 11**

**முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

1) சுருக்கமாக விடை தருக.
1. கந்தபுராண மீட்சிப்படலத்தில் விளங்கும் சிறப்பு யாது?
2. தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் திருப்பணியை முதன் முதலில் நடைமுறைப்படுத்தியவர் யார்?
3. உமாபதிசிவாச்சாரியாரின் சீடர்கள் இருவரைக் குறிப்பிடுக
4. இலங்கையில் சமயத்தை வளர்ப்பதற்கும் சமூகத்தை மேம்படையச் செய்வதற்குமாக வாழ்ந்த பெரியார்கள் இருவரைக் குறிப்பிடுக.
5. புறச்சந்தான குரவர்கள் இருவரைக் குறிப்பிடுக.
6. மகாளயபட்ச விரதம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
7. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியை வகைகளைத் தருக?
8. பகவற்கீதை தம்மபதம் ஆகிய இரு நூல்களும் எவற்றைப்பற்றிக் கூறுகின்றன?
9. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் இறைவன் இறைவி நாமங்களைத் தருக.
10. சுந்தரர் தமக்கு இந்த உலக வாழ்க்கையை முடித்து முத்தி தரும்படி இறைவனிடம் வேண்டி பாடிய பதிகம் எது?

( 10X2=20 புள்ளிகள்)



kalvi.lk

2) பின்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. அதன் பொழிப்புரைகளையும் தருக.

1. நாமார்க்கும் குடியல்லோம் ……………………………….
2. பால்நினைந்தூட்டும் ………………………………………
3. அறங்கமும் வேதமும் ……………………………………….
4. பூதம் ஐந்தும் நிலையிற் கலங்களும் ……………………. (10 புள்ளிகள்)

3) ''திரிமலத்தா ரொந்றதனிற் சென்றார் களன்றி
யொருமலத்தா ராயு முளர்'' - திருவருட்பயன்

1. மூவகை ஆன்மாக்கள் எவை?
2. மூவகை ஆன்மாக்களையும் பீடித்திருக்கும் மலம் யாது?
3. ஆன்மாக்கள் விடுதலை பெறுவதற்கான மார்க்கங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

4) ''நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா வழிபாடாகும்''

1. ஆகமம் சாரா வழிபாடு என்பது யாது?
2. கண்ணகி அம்மனுக்குரிய வருடாந்த சடங்குகள் எப்போது இடம்பெறுகின்றது?
3. கண்ணகியம்மன் சடங்குகளின் போது பாடப்படுவன எவை? பின்னணியாக ஒலிப்பவை எவை? (10 புள்ளிகள்)

5) ''சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையை விளக்குகின்றது''

1. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?
2. ஆணவத்தை சக சமலம் எனக் கூறப்படுவதற்கான காரணம் யாது?
3. ஆன்மா அனுபவிக்கும் வினைகளின் வகைகளைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

6) ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

1. மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் மூலவராக வீற்றிருக்கும் இறைவன் யார்?
2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பொங்கல் விழா எப்போது இடம்பெறுகின்றது? இதற்கு இரு வாரங்களுக்கு முன் இடம்பெறும் நிகழ்வு எது?
3. இணுவில் கந்தசுவாமி ஆலயம் உருவானமை தொடர்பான மரபுவழிக் கதையினைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சித்திரபுத்திரனார்
2. தீட்சை
3. குருலிங்க சங்கம வழிபாடு
4. கும்பாபிசேகம் (10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457